MADURAI DISTRICT

M

# முதல் இடைப்பருவ பொதுத்தேர்வு - ஜுலை 2018

## பன்னிரெண்டாம் வகுப்பு

## கணக்குப்பதிவியல்

நேரம்: 1.15 மணி

பதிவு எண் :

மதிப்பெண்கள்: 45

பிரிவு - I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 10 x 1 = 10

1. கொடுபட வேண்டிய செலவுகள் இருப்புநிலைக்குறிப்பின் _______ பக்கத்தில் தோன்றும்.
   a) சொத்துக்கள் b) பொறுப்புகள் c) வியாபார க/கு
2. இறுதிச் சரக்கிருப்பு தோன்றுவது
   a) இலாப-நட்டக் கணக்கில் b) வியாபார கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பில் c) வியாபாரக் கணக்கில்
3. 1.4.2016 அன்றைய இருப்பாய்வின்படி வங்கிக் கடன் ரூ.10,00,000, வட்டி வீதம் ஆண்டுக்கு 10%, வட்டி செலுத்தியது ரூ.60,000, 31.3.2017 அன்று நிலுவையில் உள்ள வட்டி ரூ._______.
   a) 40,000 b) 1,00,000 c) 20,000
4. 31.3.2017 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ.2,06,000. வாராக்கடன் ரூ.6,000 போக்கெழுத வேண்டும். மேலும் 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கிற்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகை ரூ._______ ஆகும்.
   a) 10,500 b) 10,300 c) 10,000
5. 31.3.2018 அன்றைய இருப்பாய்வின்படி முதல் ரூ.12,00,000 ஆகும். ஆண்டுக்கு 6% வீதம் முதல் மீதான வட்டி ரூ._______ ஆகும்.
   a) 62,000 b) 72,000 c) 92,000
6. _______ முறையில் ஆள்சார் மற்றும் ரொக்கக் கணக்குகள் மட்டுமே பராமரிக்கப்படுகின்றன.
   a) இரட்டைப்பதிவு முறை b) நிலை அறிக்கை முறை c) ஒற்றைப்பதிவு முறை
7. ஒரு தொழில் உரிமையாளரின் மொத்தச் சொத்துக்கள் ரூ.5,00,000. அவருடைய பொறுப்புகள் ரூ.3,50,000, அவருடைய முதல் ரூ._______ ஆகும்.
   a) 8,50,000 b) 2,10,000 c) 1,50,000
8. 2017 ஏப்ரல் 1-ல் கடனீந்தோர் ரூ.80,000. 2018 மார்ச் 31ல் கடனீந்தோர் தொகை ரூ.65,000. அவ்வாண்டில் கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் ரூ.1,10,000 எனில் அவ்வாண்டில் கடன் கொள்முதல் ரூ._______ ஆகும்.
   a) 1,95,000 b) 95,000 c) 1,75,000
9. மொத்த விற்பனை ரூ.4,00,000 ஆக உள்ளபோது ரொக்க விற்பனை ரூ.2,50,000 எனில் கடன் விற்பனை ரூ._____ ஆகும்.
   a) 6,50,000 b) 1,50,000 c) 2,50,000
10. வியாபாரத்தின் முதலினை அறிய தயாரிக்கப்படுவது
    a) வியாபாரக் கணக்கு b) இலாப-நட்ட அறிக்கை c) நிலை அறிக்கை

பிரிவு - II

**II. எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 11 கட்டாய வினா)* 4 x 2 = 8

11. 31.3.2004 அன்றைய இருப்பாய்வின்படி இயந்திரத்தின் மதிப்பு ரூ.50,00,000. இயந்திரத்தின் மீது 15% தேய்மானம் நீக்கப்பட வேண்டும். சரிக்கட்டுப்பதிவு தருக.
12. கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு நிறுவனத்தின் லாபத்தைக் கண்டறிக.

| | | |
|---|---|---|
| தொடக்க முதல் | ரூ. | 1,60,000 |
| இறுதி முதல் | ரூ. | 1,80,000 |
| எடுப்பு | ரூ. | 36,000 |
| கூடுதல் முதல் | ரூ. | 10,000 |

13. சரிக்கட்டுப்பதிவு என்றால் என்ன?

14. ஒற்றைப்பதிவு முறை - வரைவிலக்கணம் தருக.

15. மாற்றுதல் முறை என்றால் என்ன?

## பிரிவு - III

**III. எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 11 கட்டாய வினா)* 4 x 3 = 12

16. கீழ்க்காணும் சரிக்கட்டுதல்களுக்குத் தேவையான சரிக்கட்டுப் பதிவுகள் தருக.

a) கொடுபட வேண்டிய கூலி ரூ.15,000 b) எடுப்பு மீதான வட்டி ரூ.10,000

c) முன்கூட்டி பெற்ற வாடகை ரூ.5,000

17. 31.3.2017. அன்றைய இருப்பாய்வு கீழ்க்காணும் விவரங்களைத் தருகிறது.

| | பற்று (ரூ.) | வரவு (ரூ.) |
|---|---|---|
| முதல் | --- | 5,00,000 |
| எடுப்பு | 50,000 | --- |

முதல் மீது வட்டி 6% அனுமதிக்க. இவை இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக்காட்டுக.

18. 2016 மார்ச் 31-ம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான வியாபாரக் கணக்கை தயாரிக்க.

| *விவரம்* | *ரூ.* |
|---|---|
| சரக்கிருப்பு (1.4.2015) | 10,000 |
| கொள்முதல் | 1,60,000 |
| உள்தூக்கு கூலி | 10,000 |
| விற்பனை | 3,00,000 |
| எரிவாயு மற்றும் மின்சக்தி | 8,000 |

<u>கூடுதல் தகவல்கள்</u> : a) 31.3.2016 அன்றைய இறுதிச் சரக்கிருப்பு ரூ.20,000

b) கொடுபட வேண்டிய உள்தூக்கு கூலி ரூ.4,000

19. விடுபட்ட தகவலைக் காண்க.

| | |
|---|---|
| அவ்வாண்டில் பெற்ற லாபம் | 5,000 |
| இறுதி முதல் | 4,000 |
| கூடுதல் முதல் | 12,000 |
| எடுப்புகள் | 2,400 |
| தொடக்க முதல் | ? |

20. ஒற்றைப் பதிவு முறையின் குறைபாடுகள் ஏதேனும் 3-ஐக் கூறுக.

## பிரிவு - IV

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 3 x 5 = 15

21. a) ஆகாஷின் 2016, மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாப-நட்டக் கணக்கு தயாரிக்கவும்.

| *விபரம்* | *ரூ.* |
|---|---|
| மொத்த இலாபம் | 25,000 |
| சம்பளம் | 5,600 |
| காப்பீடு | 200 |
| பெற்ற தள்ளுபடி | 300 |

| | |
|---|---|
| பெற்ற கழிவு | 100 |
| விளம்பரம் | 450 |
| பயணச்செலவுகள் | 500 |
| அலுவலகச் செலவுகள் | 175 |
| வாடகை | 650 |

சரிக்கட்டுதல்கள் : i) கொடுபட வேண்டிய சம்பளம் ரூ.400
ii) முன்கூட்டிச் செலுத்திய வாடகை ரூ.50 iii) கழிவு பெற வேண்டியது ரூ.2,000

*(அல்லது)*

b) கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு 2014 மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலாப-நட்ட கணக்கையும், இருப்புநிலைக்குறிப்பையும் தயார் செய்க.

| | 1.4.2013 Rs. | 31.3.2014 Rs. |
|---|---|---|
| சரக்கிருப்பு | 50,000 | 25,000 |
| கடனாளிகள் | 1,25,000 | 1,75,000 |
| அறைகலன் | 5,000 | 5,000 |
| ரொக்கம் | 12,500 | 20,000 |
| கடனீந்தோர் | 75,000 | 87,500 |

மற்ற விவரங்கள் :

| | | | |
|---|---|---|---|
| பெற்ற தள்ளுபடி | 7,500 | கொள்முதல் திருப்பம் | 2,500 |
| அளித்த தள்ளுபடி | 5,000 | தொடக்க முதல் | 1,17,500 |
| பலவகைச் செலவுகள் | 15,000 | கடன் விற்பனை | 3,30,000 |
| எடுப்புகள் | 20,000 | கடன் கொள்முதல் | 2,47,500 |
| விற்பனைத் திருப்பம் | 7,500 | | |

22. a) கிருஷ்ணா என்பவரின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்காணும் விவரங்களிலிருந்து 2018 மார்ச் 31ம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்க.

| *விவரம்* | *ரூ.* |
|---|---|
| முதல் | 2,00,000 |
| எடுப்புகள் | 40,000 |
| கை ரொக்கம் | 46,000 |
| முதலீடுகள் | 20,000 |
| நற்பெயர் | 60,000 |
| பற்பல கடனீந்தோர் | 40,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 20,000 |
| பற்பல கடனாளிகள் | 80,000 |
| நிலம் மற்றும் கட்டடம் | 50,000 |

சரிக்கட்டுதல்கள் : i) கொடுபட வேண்டிய சம்பளம் ரூ.10,000 ii) வாராக்கடன் ரூ.10,000
iii) இறுதிச் சரக்கிருப்பு ரூ.1,20,000.

மேற்குறிப்பிட்ட சரிக்கட்டுதல்களுக்கு முன் அவ்வாண்டின் நிகர லாபம் ரூ.96,000

*(அல்லது)*

b) தேவையான கணக்குகளை தயார் செய்து மொத்த கொள்முதல் மற்றும் மொத்த விற்பனையைக் காண்க.

| | | |
|---|---|---|
| தொடக்க பற்பல கடனாளிகள் | ரூ. | 1,00,000 |
| தொடக்க பற்பல கடனீந்தோர் | ரூ. | 65,000 |
| பற்பல கடனாளியிடமிருந்து பெற்ற ரொக்கம் | ரூ. | 6,00,000 |
| பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | ரூ. | 40,000 |
| உள்திருப்பம் | ரூ. | 6,000 |
| வெளித்திருப்பம் | ரூ. | 10,000 |
| இறுதி பற்பல கடனாளிகள் | ரூ. | 70,000 |
| இறுதி பற்பல கடனீந்தோர் | ரூ. | 50,000 |
| ரொக்க விற்பனை | ரூ. | 50,000 |
| ரொக்க கொள்முதல் | ரூ. | 25,000 |

23. a) லெட்சுமி அவர்களின் 2011 ஏப்ரல் 1 அன்று ரூ.2,10,000 முதலுடன் தொழில் தொடங்கினார். அவர் தனது சொந்த உபயோகத்திற்காக ரூ.20,000 திரும்ப எடுத்துக் கொண்டார். அவ்வாண்டில் அவர் இட்ட கூடுதல் முதல் ரூ.25,000. 2012 மார்ச் 31 அன்று அவரது நிலை

| | | |
|---|---|---|
| வங்கியிருப்பு | ரூ. | 20,000 |
| சரக்கிருப்பு | ரூ. | 95,000 |
| பற்பல கடனாளிகள் | ரூ. | 65,000 |
| கையிருப்பு ரொக்கம் | ரூ. | 25,000 |
| பற்பல கடனீந்தோர் | ரூ. | 20,000 |

2011-2012 ம் ஆண்டிற்கான அவருடைய இலாப-நட்டத்தைக் காண்க.

*(அல்லது)*

b) 2016 மார்ச் 31ம் நாளைய இருப்பாய்வின் ஒரு பகுதி

| *விபரம்* | *பற்று* | *வரவு* |
|---|---|---|
| பற்பல கடனாளிகள் | 1,04,000 | --- |
| வாராக்கடன் | 5,000 | --- |

<u>சரிக்கட்டுதல்கள்</u> : i) வாராக்கடன் போக்கெழுதுக ரூ.4,000

ii) கடனாளி மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.

தேவையான சரிக்கட்டுப் பதிவு தந்து, இந்த விவரம் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக்காட்டுக.

******